பரிசுகள் வழங்கப்பட்டன? முதல் பரிசு ரூ. 2,000 என்று சொல்லப்படுகிறது. அது மிகக் குறைவாக இருக்கின்ற காரணத்தாலே அதை அதிகப்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கடைசியாக 21-11-1975 ஆம் தேதியன்று பரிசுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அது 1971-72 ஆம் ஆண்டுகளிலே வெளியிடப்பட்ட நூல்களுக்காக வழங்கப்பட்டிருக்கிறது. இதிலே மேற்கொண்டு விவரம் என்னிடம் இங்கே இல்லை. பரிசுத் தொகையை உயர்த்துகின்ற எண்ணமும் இப்பொழுது இல்லை.

கரூர் அரசு கலைக் கல்லூரியில் பி. காம். பட்டப்படிப்பு

*வினா எண் 2—திரு எம். சின்னசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருச்சி மாவட்டம், கரூர் அரசினர் கலைக் கல்லூரியில் பி.காம். பட்டப்படிப்பு துவங்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

(இ) எத்தனை மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் படுவார்கள் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ; (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூரிலே அரசு கலைக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு ஏறத்தாழ 15 ஆண்டுக்காலம் ஆகிறது. அங்கே, பி.ஏ., பி.எஸ்.சி. பட்டப் படிப்புகளுக்கான வகுப்புகள் இருக்கின்றன. ஆனால், பி.காம். வகுப்பு இல்லை. அப்பகுதியிலுள்ளவர்கள் பி.காம். படிக்க வேண்டுமானால், 50 மைல் தூரத்திலுள்ள திருச்சிக்கோ, அல்லது மேற்கே உள்ள கோயம்புத்தூருக்கோ வரவேண்டும். அடுத்த ஆண்டாவது முயற்சி செய்து, பி.காம். பட்டப் படிப்பை, அந்தக் கலைக் கல்லூரியில் துவங்க அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கல்லூரிகளில் பட்டப் படிப்பைத் துவங்குவதற்கான நடைமுறையை நான் சொல்ல விரும்புகிறேன். ஒரு கல்லூரியிலே புதிய பட்டப் படிப்பைத் தொடங்குவது என்பது அந்தந்தக் கல்லூரிகளில், அங்கேயிருக்கிற தேவைக்கேற்பவும், அனுப்பப்படுகிற விண்ணப்பங்களைப் பொறுத்தும் அந்தந்தக்

1981 ஜனவரி 23]

கல்லூரி முதல்வர்கள் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவித்து, பல்கலைக் கழகங்கள் எடுக்கின்ற முடிவை ஒத்து அமைவதாகும். அரசாங்கம் நேரடியாக எந்தப் பகுதியிலும் பட்டப் படிப்புகளை ஏற்படுத்துகின்ற பழக்கம் இதுவரையிலே கிடையாது.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கரூரிலிருந்து திருச்சிக்கு ஏறத்தாழ 50 மைல் தூரம் இருக்கிறது. அந்த 50 மைல் சுற்றளவிலே பி.காம். பட்டப் படிப்பு உள்ள கல்லூரி ஏதும் இல்லை. ஆகவே, வருகிற கல்லூரி ஆண்டிலாவது கரூர் அரசினர் கலைக் கல்லூரியில் பி.காம். வகுப்பு துவங்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: நான் ஏற்கனவே குறிப்பிட்ட மாதிரி, கல்லூரிகளிலே பட்டப் படிப்பைத் துவங்குவது பற்றிய ஒரு விளக்கத்தைத் தர விரும்புகிறேன். அந்தந்தக் கல்லூரியிலே இருக்கிற கல்லூரி தலைவர்கள் அந்தக் கல்லூரியிலே ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று கருதப்படுகிற அல்லது தேவைப்படுகிற பிரிவுகள் குறித்து, விண்ணப்பம் செய்யவேண்டும். அதைப் பல்கலைக் கழகம் பரிசீலித்து அதற்கு அனுமதி வழங்க வேண்டும். அரசும் அதற்கு அனுமதி வழங்க வேண்டும். அரசு அனுமதி வழங்குவது என்பது இரண்டாவது வருகின்ற கட்டம். ஆகவே, இந்தக் கல்லூரியைப் பொறுத்தவரை அரசு அனுமதி வழங்குகிற கட்டத்தை இன்னும் அடையவில்லை.

திரு. தி, கா, நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைக் கல்லூரி இருக்கிற எல்லா இடங்களிலும் பி.ஏ. வகுப்புகளை ஆரம்பிப்பதோடு, பி.காம். வகுப்புகளைத் தொடர்ந்து ஆரம்பிக்க அரசு அனுமதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கருத்தை ஏற்றுக் கொள்வதற்கில்லை. காரணம், பி.காம். பட்டப் படிப்பு தொழில் பாடம் போன்ற ஒன்றாகும். அதை எல்லா கல்லூரிகளிலும் ஆரம்பித்து நிறைய பி.காம் பட்டதாரிகளை நாம் உருவாக்கி விடுவோமானால், அதற்கடுத்தபடியாக, அவர்களுக்கு எத்தகைய வேலை வாய்ப்புத் தருவது என்பது பிரச்னையாகும். ஆகவே, வேலை வாய்ப்பு, நம்முடைய தேவை, இவைகளைப் பொறுத்துத்தான் நாம் பாடப் பிரிவுகளை ஆரம்பிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதோடு, ஆசிரியர்கள் பற்றாக்குறை கூட, இந்தக் கல்விப் பிரிவில் பாடப் பிரிவில் தடையாக இருக்கிறது.

திரு. ஜே. எஸ். இராசு : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரி முதல்வர்கள் தேவைப்படுகின்ற பட்டப் படிப்பைப் பற்றி பல்கலைக் கழகத்திற்கு எழுதினால்தான், அது கவனிக்கப்பட்டு ஆவன செய்யப்படும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். சில கல்லூரிகளில் முதல்வர்கள் ஒருகால் ஆர்வம் காட்டாமல் இருந்து, பொது மக்களுடைய பிரதிநிதிகள், சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள், அல்லது ஒன்றியத் தலைவர்கள் போன்ற மற்றவர்கள் அதைப் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவித்தால், அதைக் கவனிக்குமாறு பல்கலைக் கழகம் அறிவுறுத்தப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பல்கலைக் கழகம் அட்டானமஸ் பாடி அல்லவா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசாங்கம் என்ன செய்வது என்பதை நாம் பேசுவதற்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் குறைபாடுகளைப் போக்கவேண்டுமானால், மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் அந்தக் கல்லூரிக்கும் எந்த அளவுக்குத் தொடர் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் அந்தக் கல்லூரி முதல்வர்களுக்கும் என்ன தொடர்பு இருக்கின்றது என்பதைப் பற்றி நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அவர்கள் கல்லூரி தலைவர்களோடு தொடர்பு கொண்டு, இன்னின்ன வகுப்புகளைத் துவக்கலாம் என்று பேசி அங்கேயே அதற்கான முயற்சிகளை நேரடியாக மேற்கொள்ளலாம்.

தர்மபுரி அரசு கலைக் கல்லூரியில் பட்டமேற்படிப்பு வகுப்புகள்.

*வினா எண். 3—திரு. எஸ். அரங்கநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தர்மபுரி அரசு கலைக் கல்லூரியில் எம்.ஏ., எம்.எஸ்.ஸி. வகுப்புகள் தொடங்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், 1980–81-ம் ஆண்டிலேயே தொடங்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?